# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| மாவட்டம் : | தேனி | காலம் : | 18/02/2023 | முதல் | 22/02/2023 |
|---|---|---|---|---|---|
| அறிக்கை எண் : | 014/ 2023 | வெளியீட்டு நாள் : | | 17/02/2023 | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 18°-19° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (12.02.2023 முதல் 16.02.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 22-02-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12/02 | 13/02 | 14/02 | 15/02 | 16/02 | தேதி | நாள்-5 18/02 | நாள்-5 19/02 | நாள்-5 20/02 | நாள்-4 21/02 | நாள்-5 22/02 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 34 | 35 | 35 | 34 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 34 | 34 | 35 | 35 | 35 |
| 19 | 19 | 19 | 18 | 18 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 19 | 20 | 20 | 21 | 21 |
| 4 | 3 | 3 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 80 | 84 | 81 | 68 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 90 | 90 | 80 | 70 |
| 30 | 26 | 36 | 28 | 42 | | 30 | 20 | 30 | 20 | 20 |
| 10 | 6 | 8 | 9 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 6 | 4 | 8 | 8 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | **காற்றின் திசை** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வடக்கு** | **வடக்கு** |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது 34°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 19°-21° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 4 முதல் 8 கி.மீ வேகத்தில், வடகிழக்கு மற்றும் வடக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### அடுத்த இருவாரத்திற்கான நீட்டி விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (17- 23 பிப் 2023):

### மழைப்பொழிவு :

17-02-2023 - 23-02-2023: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட குறைவான மழை பெய்ய வாய்ப்பு.

### அதிகபட்ச வெப்பநிலை :

17-02-2023 - 23-02-2023:

மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே இருக்கும் .30°செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

குறைந்தபட்ச வெப்பநிலை :

17-02-2023 - 23-02-2023: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடை காலங்களில் ஏற்படும் தீவனப்பயிர்கள் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள் 10 சதவீத நிலத்தில் கம்பு, நேப்பியர் போன்ற தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம். அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலேயே நிலவுவதால் மக்காசோளம் மற்றும் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் அறுவடை பணிகளுக்கு திட்டமிடலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : திராட்சை, வெண்டை,** கால்நடை.

**திராட்சை**:

- திராட்சை பயிரில் இலைப்பேன் **கட்டுப்படுத்த** ஒரு ஏக்கருக்கு 50கிராம் என்ற அளவில் தையோமெதாக்சம் என்ற மருந்தினை தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

**வெண்டை**:

- வெண்டை பயிரில் தத்துப்பூச்சி **கட்டுப்படுத்த** ஒரு ஹெக்டேருக்கு 100 மி.லி இமிடாகுளோ:பிரிட் மருந்தினை 500 லிட்டர் தெளிதிரவத்துடன் கலந்து தெளிக்கவும்.

கால்நடை:

- தற்போது நிலவும் வானிலையில் மாடுகளை அடைப்பான் நோய் தாக்க வாய்ப்பு உள்ளது.
- இந்நோய் தாக்கப்பட்ட மாடுகளுக்கு காய்ச்சல் இருக்கும். மாடுகளில் உணர்வு இழப்பு ஏற்பட்டு பிறகு இறந்து விடும்.
- இறந்தவுடன் மூக்கு, வாய், ஆசனம் போன்றவற்றிலிருந்து கருமை நிறமான இரத்தம் வெளியேறும்.
- இந்நோயில் இருந்து தங்கள் கால்நடைகளைக் காப்பாற்ற வருடத்திற்கு ஒரு முறை அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி அடைப்பான் நோய்க்கான தடுப்பூசிகளை போடவேண்டும்.